முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அவர்கள் என்ன கொடுத்திருந்தார்களோ அதற்கு மாறுபட்ட வேறு துறைக்கு சம்பந்தப்பட்ட சில கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்கள். கவனஈர்ப்புத் தீர்மானத்தில் கொடுக்கப்பட்டது காலரா நோயால் இறந்தவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். எனவே, நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டவுடனே கவனித்து இருக்கிறது. எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்ட அறிக்கையில் இப்படிப்பட்ட கருத்துக்கள் சொல்லப்படவில்லை. அவர் சொல்லியிருப்பது அங்கேபோய்க் கொண்டிருக்கிற குடிதண்ணீர் குழாய்கள் உடைக்கப்பட்டிருக்கிறது. அப்படி உடைக்கப்படுகிறபோது—சில நேரங்களில் கிராமங்களில் உடைத்து விடுகிறார்கள். நமக்கே தெரியும். உடைக்கப்படுகிறபோது தண்ணீர் மாசுபடுகிறது. அதன்காரணத்தால் இது வந்திருக்கிறது. இது தெரிந்தவுடன் எல்லா நடவடிக்கைகளும் உடனடியாக எடுத்திருக்கிறோம். மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்ட துறைக்கு மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் நல்லது. நேற்றே கூட இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை பார்த்தவுடன் உடனடியாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதாக என்னிடத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, தனியாக அதைப்பற்றி பேசினால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:

(1) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1983–84 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 18–வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

1992 செப்டம்பர் 24]. [திரு. ம. சின்னசாமி]

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981—82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 30-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய என்பத்திரெண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் :

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஆறாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''

எனக் கோருகிறேன்.